மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.33/2025</u>

2026ம் ஆண்டு ஜுன் 23ம் நாள் செவ்வாய்க்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலைச்செல்வி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலுாக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>23.06.2026 பி.வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. என் தாத்தா பெயர் மாரியப்ப கவுண்டர் என்றால் சரிதான் அவருக்கு என் தகப்பனார் பழனிச்சாமி கவுண்டர் மற்றும் சுப்பராய கவுண்டர் ஆகியோர்கள் வாரிசுகள் என்றால் சரிதான். என் தாத்தாவிற்கு சொந்த ஊர் ராசாத்தாவலசு கிராமம் இடைக்காட்டு வலசு என்று சொன்னால் சரிதான். அங்கு சங்கம் தோட்டம் என்ற பூர்வீக பூமி என் தாத்தாவிற்கு இருந்தது என்று சொன்னால் சரிதான்.

2. அந்த பூமியை விற்றுவிட்டு அய்யம்பாளையம் வந்து விட்டார்கள் என்றால் இல்லை முதலில் எட்டிமடை சென்று விட்டு மேட்டுப்பாளையத்தில் குத்தகைக்கு சிறிது நாள் ஓட்டிவிட்டு பிறகுதான் அய்யம்பாளையம் வந்தார்கள் அய்யம்பாளையத்திற்கும், மேட்டுப்பாளையம் கிராமத்திற்கும் இடையே சுமார் 2 பர்லாங் தொலைவில் இருக்குமா என்றால் இருக்கும். என் தாத்தா

மாரியப்பகவுண்டர் என்பவரோடு பிறந்தவர் சின்னப்ப கவுண்டர் என்று சொன்னால் சரிதான் அவரை நான் பார்த்ததில்லை.

3. அவரின் பேரன் தான் இந்த வழக்கில் சாட்சியம் அளித்த வா.சா.4 என்று சொன்னால் சரிதான். வழக்கு சொத்து அய்யம்பாளையம் ஊர் நத்தத்தில் அமைந்துள்ளது என்று சொன்னால் சரிதான் அந்த சொத்தில் மாரியப்ப கவுண்டர், சுப்பராய கவுண்டர் மற்றும் பழனிச்சாமி கவுண்டர் ஆகியவர்கள் குடியேறினார்கள் என்றால் இல்லை என் தகப்பனார் மற்றும் எனது பெரியப்பா சுப்பராய கவுண்டர் ஆகியோர்கள் மட்டும் குடியேறினார்கள். மாரியப்ப கவுண்டர் அய்யம்பாளையத்தில் வைத்து தான் இறந்தார் என்றால் அது எனக்கு தெரியாது நான் பிறப்பதற்கு முன்பே அவர் இறந்து விட்டார். என் தகப்பனார் 2003 ஆம் ஆண்டு இறந்துவிட்டார் அய்யம்பாளையத்தில் குடியேறிய சொத்தில் என் தகப்பனார் வடபுறமும், எனது பெரியப்பா தென்புறமும் பங்கி எடுத்துக் கொண்டார்கள் என்றால் சரிதான்.

4. சுப்பராய கவுண்டருக்கு இரண்டு மகள்கள் வாரிசுகள். அவர்கள் அந்த சொத்துக்களை வேறு நபர்களுக்கு விற்பனை செய்து விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். எனக்கு எத்தனை வயது இருக்கும் போது அய்யம்பாளையம் வந்திருப்பார்கள் என்றால் அப்போது சுமார் 5 வயது இருக்கலாம். நத்தம் காலியிடங்களை பொறுத்து நத்தம் தாசில்தார் அவர்களால் குடியிருப்பவர்களுக்கு 1996 ஆம் ஆண்டு நத்தம் பட்டா வழங்கப்பட்டது என்றால் ஆமாம்.

5. அந்த பட்டாவை தான் எனது தரப்பில் பி.வா.சா.ஆ.1 ஆவணமாக நான் ஒப்பித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நத்தம் சொத்தில் பூர்வீகமாக குடியிருந்து வந்தாலும் அதில் யார் குடியிருக்கிறார்களோ

அவர்கள் பெயருக்கு தான் பட்டா வழங்கப்படும் என்றும் அதை வைத்துக்கொண்டு பட்டா வழங்கப்பட்ட நபருக்கு அது தனிப்பட்ட சொத்து என்று கருத இயலாது என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் பெயர் லட்சுமி. அவர் 2020 ஆம் ஆண்டு இறந்துவிட்டார். இரண்டாம் பிரதிவாதி ரவி என்பவர் எனது சகோதரர் என்று சொன்னால் சரிதான்.

6. வாதி எனது சகோதரரின் மகன் என்று சொன்னால் ஆமாம் என் சகோதரர் ரவி என்பவர் வெள்ளகோவில், கரட்டுப்பாளையம் கிராமத்தில் பவர்லூம் போட்டு தொழில் செய்து அங்கேயே வசித்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். வாதி காங்கேயத்தில் குடியிருந்து வருகிறார் என்றால் இல்லை கடை தான் காங்கேயத்தில் வைத்துள்ளார் அவர் கரட்டுப்பாளையத்தில் குடியிருந்து வருகிறார். என் சகோதரர் ரவி குடிக்கு அடிமையாகி குடும்பத்தை கவனிக்காமல் சுற்றிக்கொண்டு வருகிறார் என்றால் இல்லை அவர் நல்ல முறையில் தறி போட்டு தொழில் செய்து கொண்டு வருகிறார்.

7. நான் கடந்த 2004 ஆம் ஆண்டு தாவா சொத்தை பொறுத்து என் சகோதரர் மற்றும் எனது தாயாரிடம் இருந்து ஒரு விடுதலை ஆவணம் எழுதி வாங்கியதாக ஒரு ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். அந்த ஆவணத்தில் தாவா சொத்து என் தகப்பனாருக்கு எப்படி பாத்தியப்பட்டது என்று நாங்கள் குறிப்பிட்ட எழுதியுள்ளோம் என்று சொன்னால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் தகப்பனாருக்கு பிதிராஜித வகையிலும் பட்டாவின் அடிப்படையிலும் தாவா சொத்து பாத்தியப்பட்டதாக வாசகங்கள் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் ஆமாம்.

8. தாவா சொத்து என் தகப்பனாருக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டு அனுபவம் செய்துவரப்பட்ட சொத்து என்றும் அதனால் தாவா சொத்தை என் தகப்பனார் தனிப்பட்ட சொத்து என்று நான் சொல்வது தவறு என்றும் சொன்னால் சரியல்ல. என் தகப்பனாருக்கு தாவா சொத்து பூர்வீக வகையில் பாத்தியம் என்பதால் தான் அது சம்பந்தப்பட்ட வாசகங்கள் பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் கண்டு எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல.

9. பி.வா.சா.ஆ.2 ஆவணம் ஏற்படுத்தப்பட்ட சமயத்தில் வாதி இந்து வாரிசுரிமை சட்டபடி பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னை ஈரோடு மாவட்டம் கொழாநெல்லி கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்தார்கள் என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 சாட்சியான சிவசாமி என்பவர் என் கணவரின் மாமன் மகன் என்று சொன்னால் ஆமாம். வேலுமணி என்பவர் அய்யம்பாளையத்தை சேர்ந்தவர் என்று சொன்னால் சரிதான்.

10. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் நான் தாவா சொத்தில் எந்த விதமான பாத்தியமும் தனிப்பட்ட முறையில் கோர இயலாது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட வரி ரசீதுகளான பி.வா.சா.ஆ.3 முதல் பி.வா.சா.ஆ.5 ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதி என்னிடம் பங்கு கேட்டு நான் தர மறுத்ததால் எனக்கு பாகம் கேட்டு வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான்.

11. அதற்கு நான் பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் சரிதான். அதற்கு பின்பு வாதி இந்த வழக்கு தாக்கல் செய்தார் என்றால் ஆமாம்.

வாதியின் தகப்பனார் வாதியோடு நல்ல உறவு முறையில் இல்லாததால் பி.வா.சா.ஆ.2 ஆன பாகபாத்திய விடுதலை ஆவணம் குறித்த விபரங்கள் வாதிக்கு தெரியாது என்றும் அதனால் பி.வா.சா.ஆ.2 ஆவணம் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் சொன்னால் சரியல்ல. வாதிக்கு தாவா சொத்தில் 12 ல் 4–½ பாகம் உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் வாதியின் பாகத்தை நான் வாதிக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வாதிக்கு தாவாவில் கோரியுள்ளபடி முதல்நிலை தீர்ப்பு கிடைக்கத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.06.23 18:41:15 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்